# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டு சிறப்பு கல்விமாணித் தேர்வு – 2014/2015 (September / October- 2018)

## EDS - 2223 பிள்ளை வளர்ச்சியும் கற்றலும் (Child Growth and Study)

நேரம்: 03 மணித்தியாலங்கள்

பகுதி I இல் இருந்து இரு (02) வினாக்களுக்கும் பகுதி II இல் இருந்து மூன்று வினாக்களுக்கும் மொத்தமாக ஐந்து (05) வினாக்களுக்கு விடை தருக.

---

### பகுதி – I

01. அ) பிள்ளை விருத்தியில் சகபாடிகளின் செல்வாக்குக் காரணமாக ஏற்படும் சாதகமான விருத்திகள் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றினை விளக்குக? (9புள்ளிகள்)

ஆ) பிள்ளை விருத்தி பற்றிய பல்வேறு கொள்கைகளுள் உயிரி - சூழல் இடைத்தாக்கக் கொள்கை பற்றிய பியாயே கூறிய கருத்துக்களைக் குறிப்பிடுக? (5 புள்ளிகள்)

02. அ) "வளர்ச்சி, முதிர்ச்சி, கற்றல் ஆகிய உடல் தொழிற்பாடுகள் சூழல், பரம்பரை ஆகிய காரணிகளை அடிப்படையாக கொண்டன" பிள்ளை விருத்தியில் இவை எவ்வாறான இடைத்தொடர்புகளைக் கொண்டுள்ளன என்பதனை விளக்குக? (8 புள்ளிகள்)

ஆ) பிள்ளையின் கற்றலுக்கான ஆயத்த நிலையானது அதன் கற்றல் செயற்பாடுகள் வெற்றியளிப்பதற்கு எவ்வாறு பங்களிப்புச் செய்கின்றன என்பதனை எடுத்துக்காட்டுக? (6 புள்ளிகள்)

03. அ) பிள்ளை விருத்திச் செயன்முறையின் பாரம்பரியத்தின் செல்வாக்கு பற்றி கருத்துரைக்குக? (8 புள்ளிகள்)

ஆ) பிறப்பிற்கு முன்னுள்ள விருத்தியில் சமூக வகுப்பு வேறுபாடுகள் பெறும் முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டுக? (6 புள்ளிகள்

## பகுதி II

04. அ) பிறப்பிற்கு முன்னான விருத்தி நிலைகளில் முளைய நிலைப் பருவத்தில் ஏற்படும் முக்கிய செயற்பாடுகள் பற்றி ஆராய்க? (12 புள்ளிகள்)

ஆ) தாயின் கர்ப்பகாலத்தில் மூன்றாவது மாதம் தொடக்கம் குழந்தை பிறக்கும் வரையுள்ள காலப்பகுதியில் இடம் பெறுகின்ற குறிப்பான விருத்தி நிலைகளை சுட்டிக்காட்டி அவற்றினை சுருக்கமாக விளக்குக? (12 புள்ளிகள்)

05. அ) குழந்தைப்பருவத்தில் முதல் இரு வருடகாலப்பிள்ளைகளின் இயக்கத்திறன் வளர்ச்சியில் எட்டுதல் - உணர்தல், நடத்தல் என்னும் தோற்றப்பாடுகள் எவ்வாறு ஒருங்கிசைகின்றன என்பது தொடர்பாக கருத்துரைக்குக? (12 புள்ளிகள்)

ஆ) "பிள்ளை வளர்ப்பு நடைமுறைகளைத் தீர்மானிப்பதில் பெற்றோரின் நடத்தைகளில் ஏற்றுக் கொள்ளல் - மறுத்தல், சுதந்திரம் - கட்டுப்பாடு ஆகிய இரு பரிமாணங்கள் குறிப்பிடத்தக்கவையாகும்". இவ்விரு பரிமாணங்களையும் பெற்றோருடன் தொடர்புபடுத்தி விளக்குக? (12 புள்ளிகள்)

06. அ) ஆளுமை விருத்தி பற்றிய அணுகு முறைகளுள் சுயஎண்ணக்கரு அணுகுமுறை, சமூகக்கற்றல் அணுகுமுறை போன்றன பெறும் முக்கியத்துவத்தினை சுருக்கமாக ஆராய்க?

(12 புள்ளிகள்)

ஆ) எரிக் எரிக்சனினால் முன்வைக்கப்பட்ட குழந்தை பிறந்ததிலிருந்து 41 வயது வரையான விருத்திப் பரம்பலின் எட்டு (8) நிலைகளிலும் விருத்தி செய்யப்படும் அகப்பண்புகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக சுருக்கமாக விளக்குக? (12 புள்ளிகள்)

07. அ) மனவெழுச்சி என்றால் என்ன? என்பதனை தெளிவுபடுத்தி, மனவெழுச்சி பற்றி புலோமின் (1985) கூறிய உடல் மாற்றம், உளவியல் மாற்றம் என்பவற்றைப் பற்றி விஞ்ஞான ரீதியாக விளக்குக. (12 புள்ளிகள்)

ஆ) முன்பள்ளி பிள்ளைகளிடையே எதிர்மறையான மனவெழுச்சிகள் எவ்வாறான சந்தர்ப்பங்களில் ஏற்படுகின்றன என்பதனை இனங்கண்டு அவ்மனவெழுச்சிகளை, முன்பள்ளி ஆசிரியர் ஒருவர் கற்றலுக்குச் சாதகமாக எவ்வாறு மாற்றியமைக்கின்றார் என்பதனை நீர் சமூகமளித்த முன்பள்ளியை ஆதாரமாகக் கொண்டு ஆராய்க ? (12 புள்ளிகள்)